நல்லூர் [illegible] யாழ்ப்பாணம்

# 'எல்லாளன் படை' மீண்டும் எச்சரிக்கை!

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

[illegible] 36 திருவள்ளுவர் ஆண்டு 2025 சித்திரை 6 இதழ் 68
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 19-4-1994

(கொழும்பு)
வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் இலங்கைக்கு வர வேண்டாம் என்று எல்லாளன் படை நேற்று மீண்டும் எச்சரிக்கை செய்துள்ளது.
இதனுடன் கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலுமுள்ள உல்லாச விடுதிகளுக்கு கடுமையான பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக, தெரிவிக்கப்படுகிறது. [6-ம் பக்கம் பார்க்க]

## கொழும்பு பல்கலைக்கழக துணைவேந்தர் ராஜினாமா
### சுதந்திரக் கட்சியில் சேர முடிவு

(கொழும்பு)
கொழும்பு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் ஜே. எம். பீரிஸ் தனது பதவியிலிருந்து இராஜினாமா செய்துள்ளார்.
ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவுக்கு அவர் நேற்று தனது இராஜினாமாக் கடி[illegible] [6-ம் பக்கம் பார்க்க]

## அரசின் முடிவுகளை கண்டித்தவர்

(கொழும்பு)
கொழும்பு பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பீரிஸ் தற்போதைய ஐக்கிய தேசியக் கட்சி அரசின் கொள்கைகளையும், அண்மைக்காலங்களில் அரசு எடுத்த சில முடிவுகளையும் [illegible] (6-ம் பக்கம் பார்க்க)

## ★ தமிழக சட்ட சபையில்
# 'புலிகள் தடை' பற்றிய பிரேரணை
# இறுதி நேரத்தில் ஒத்திவைப்பு!
## அமைச்சர்கள் அனுமதியின்பிறகே அடுத்த முடிவு!!

(சென்னை)
இந்தியாவில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மீது மேலும் இருவருடங்களுக்கு தடைவிதிக்கவேண்டும் என்று இந்திய மத்திய அரசை வலியுறுத்தும் பிரேரணை ஒன்றை தமிழ் நாடு அரசு இறுதிநேரத்தில் ஒத்திவைத்தது. தமிழக அமைச்சரவைக் கூட்டத்தில் இந்தப் பிரேரணை குறித்து முடிவு எடுப்பதற்காகவே நேற்று சமர்ப்பிக்கப்படவிருந்த இந்தப் பிரேரணை ஒத்திவைக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பிரேரணை நேற்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றப்படவிருந்தது குறிப்பிடத்தக்கது, (6-ம் பக்கம் பார்க்க)

## ஜெயலலிதா ஆலோசனை

(சென்னை)
தமிழகத்தில் சட்டம், ஒழுங்கு சீர்குலைவது குறித்து தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா பாதுகாப்பு உயர் அதிகாரிகளுடன் நேற்றுசுமார் ஒருமணி நேரம் விரிவான ஆலோசனை நடாத்தினார்.
இவ்விடயம் குறித்து மத்திய இரேஷ்ட அமைச்சர்கள் மற்றும் அரசியல் வாதிகள் தமிழக அரசுமீது குற்றம் சுமத்தி வந்ததைதொடர்ந்தே முதல்வர் இவ் ஆலோசனைக் கூட்டத்தை நடாத்தியதாக தெரிவிக்கப்படுகிறது.
இதேவேளையில் தமிழக அமைச்சரவைக் கூட்டம் நேற்று மாலை நீண்டநேரமாக நடைபெற்றதாகவும் அறிவிக்கப்படுகிறது. (ஈ-இ)

## கடற்படைத் தாக்குதலில்
# படுகாயமடைந்த மீனவர் மரணம்

(யாழ்ப்பாணம்)
[illegible] கடலில், மீனவர் மீது கடந்த வாரம் கடற்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் படுகாயமடைந்த மீனவர் ஒருவர், நேற்று யாழ். போதனா வைத்தியசாலையில் மரணமானார்.
ஆனைக்கோட்டை காவற்காடுப் பகுதியைச் சேர்ந்த, 18 வயதான அழகரத்தினம் சோமசுந்தரம் என்ற மீனவரே நேற்று மரணமானவராவார். -வி-இ

## மாத்தளை மாநகரசபையை கலைக்குமாறு கோரிக்கை

(கொழும்பு)
மாத்தளை மாநகரசபையின் நிர்வாகத்தை கலைத்து விடுமாறு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் செயலாளர் தர்மசிறி சேனநாயக்க அரசைக் கோரியுள்ளார். (6-ம் பக்கம் பார்க்க)

## இன்று படகுச்சேவை நடைபெறாது

(யாழ்ப்பாணம்)
தியாகச்சுடர் அன்னைபூபதியின் நினைவுதினத்தை முன்னிட்டு வழமையாக நடைபெறும் கிளாலி - பூநகரி படகுச்சேவை இன்று நடைபெறமாட்டாது. மீண்டும் படகுச் சேவை நாளை 20ம் திகதி புதன் கிழமை வழமையான நேரத்தில் நடைபெறும் என விடுதலைப்புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

## அன்னை பூபதி நினைவு நிகழ்வுகள்
# இன்று உணர்வுடன் அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)
தியாகச்சுடர் அன்னைபூபதியின் ஆறாவது ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வுகள் இன்று யாழ். குடா எங்கும், உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்படவுள்ளது.
வீதிகள், வாசிகசாலைகள், பொதுஇடங்கள், வீடுகள் எங்கும் அன்னை பூபதியின் உருவப்படங்கள் வைக்கப்பட்டும் [illegible] எதுடன், யாழ், குடாநாட்டின் பல இடங்களில் அன்னையின் தியாகத்தை வெளிப்படுத்தும் பெரியளவிலான பதாதைகளும் கட்டப்பட்டுள்ளன.
யாழ். குடாநாடு முழுவதும் இன்று காலை முதல் உண்ணாவிரதங்களும், சிரமதானங்களும், பொதுக்கூட்டங்களும் கலைநிகழ்ச்சிகளும் அன்னை பூபதியின் நினைவாக, கோட்ட ரீதியாக ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. -வி

## மாதகல் பகுதியில் புலிகள் தாக்கு
### 3 படையினர் காயம்

(கொழும்பு)
மாதகல் பகுதியில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட கிளைமோர் தாக்குதலில் மூன்று படையினர் காயமடைந்ததாக பலாலி இராணுவ முகாம் செய்திகளை மேற்கோள்காட்டி கொழும்பு ஆங்கிலப் பத்திரிகையான 'ஐலண்ட்' தெரிவித்துள்ளது. விடுமுறையை கழிப்பதற் [6-ம் பக்கம் பார்க்க]

## கொழும்பு குண்டு வெடிப்புக்களால்
# வெளிநாட்டு முதலீட்டாளர் மத்தியில் பெரும் அச்சம்!

(கொழும்பு)
கொழும்பு நகரில் அடுத்தடுத்து இடம்பெற்ற குண்டு வெடிப்புகளை அடுத்தும், இதற்கு உரிமை கோரிய எல்லாளன் படை விடுத்த எச்சரிக்கையை அடுத்தும் வெளிநாட்டு முதலீட்டாளர் மத்தியில் பெரும் அச்சநிலை ஏற்பட்டுள்ளதாக கொழும்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.
கொழும்பு நகரில் முதலீடு [illegible] மேற்கொண்டுள்ளவர்களும், சுதந்திரவர்த்தக வல (6-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### இந்து சமயம்

கடந்தகால இந்துசமய (5 வருட) வினாத்தாள்களின் தொகுப்பு சகல புத்தகசாலைகளிலும் விற்பனையாகிறது. விலை ரூபா 10/- (இ-946)

### ENGLISH

Credit பெறுபேறடைய ஆரம்பத்தில் இருந்து பல தனிப்பட்ட பயிற்சியின் மூலம் திறமையை அதிகரிக்கலாம். (Spoken உட்பட) பட்டதாரி 85, கைலாசபிள்ளையார் கோவிலடி, திருநெல்வேலி. (சி-962)

### வீடு விற்பனைக்கு

வட்டுக்கோட்டை மூளாய் வீதியில் உடுக்கியவளைப் பிள்ளையார் கோவிலுக்கு முன்பாக விற்பனைக்குண்டு. தொடர்பு:- ஸ்ரீமுருகன் அரிசி ஆலை, மூளாய் வீதி, வட்டுக்கோட்டை. (இ-963)

### இயற்கை வளங்களைப் பாதுகாப்போம்

ரியோ பூமி மாநாட்டில் பிடல் கஸ்ட்ரோ ஆற்றிய உரை விற்பனையாகின்றது. வசந்தம் புத்தக நிலையம். (சி-967)

### அணுவிலிருந்து ஆகாயம் வரை

எளிய தமிழில் அறிவியல் கட்டுரைகள் விற்பனையாகிறது. வசந்தம் புத்தக நிலையம். (சி 969)

### துளிர்

தமிழ்நாடு புதுவை அறிவியல் இயக்கம் இணைந்து வெளியிடும் சிறுவர்களுக்கான அறிவியல் மாத இதழ் விற்பனையாகிறது. வசந்தம் புத்தக நிலையம் சந்தா ஏற்றுக்கொள்ளப்படும். (இ 968)

மலரமைப்பு:
க. பரமசாமி

---


பெண் இனத்தின் ஒளிவிளக்கே
பெண்ணின் பெருமையை
உயர்த்தி விட்டாயே

★ அன்னை பூபதி ★

ஸ்ரீ லங்கா புத்தகசாலை
ஸ்ரீ லங்கா அச்சகம்
234, கே. கே. எஸ். வீதி யாழ்ப்பாணம்



அணையாத தியாக தீபம்
அன்னை பூபதியே
ஆண்டு ஆறு என்ன?
பல்லாண்டு நெஞ்சில் நிலைப்பாய்!

எஸ்ரி மெடிக்கல்ஸ்
490, ஆஸ்பத்திரி வீதி
(OPD முன்பாக)
யாழ்ப்பாணம்



எங்கள் வாழ்விலும்,
எங்கள் மனங்களிலும்
நிலைத்து நிற்கும்
அன்னை பூபதியே
உன் தியாகத்தை எண்ணிப் பார்க்கிறோம்

சிவா ஸ்ரோர்ஸ்
இந்துக் கல்லூரி சந்தி.
425, கே. கே. எஸ். வீதி யாழ்ப்பாணம்



உன்ன உணவின்றி
உண்ணா நோன்பிருக்கவில்லை!
தமிழன் தலைநிமிர்ந்து வாழவே
உண்ணாநோன்பிருந்தாய் அன்னை பூபதி

ஸ்ரீ சரஸ்வதி பவன்
(சைவ உணவகம்)
195 (57) கே. கே. எஸ். வீதி.
யாழ்ப்பாணம்



மட்டுநகரில் வீசிய புரட்சிப்புயலே
பூபதித்தாய் அவர் நாமம் வாழி!

இராஜேஸ்வரி ரேடீஸ்
(அழகுசாதனப் பொருட்கள் விற்பனையாளர்)
பரமேஸ்வரா சந்தி திருநெல்வேலி



உலகத் தமிழ் இனத்தை
விழிப்படையச்செய்த சாத்வீகத்தாய்
பூபதியே

ஸ்ரீ சுப்பிரமணியம் புத்தகசாலை
ஸ்ரீ சுப்பிரமணியம் அச்சகம்
235, கே. கே. எஸ். வீதி யாழ்ப்பாணம்



அஹிம்சைப் போரில் தன்னைத் தற்கொடையாக்கி
ஆண்டுகள் ஐந்து சென்றாலும் உன் தியாகம்
தமிழ் நெஞ்சங்களில் நிலைத்து நிற்கும்

நதியா நகை மாளிகை
02, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்


## ஜப்பானுக்கு சுற்றுலா

(பண்டத்தரிப்பு)

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் அகில இலங்கை ரீதியில் அதிக புள்ளிகளைப் பெற்று முதலிடம் பெற்ற சாந்தை தமிழ்க் கலவன் வித்தியாலய மாணவன் செல்வன் கணேஸ்வரன் பிரகாஷ் கல்வி அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஜப்பான் நாட்டுச் சுற்றுலாவில் கலந்துகொள்வதற்காக தனது பெற்றோர் சகிதம் கொழும்பு சென்றுள்ளனர். -73-த


அன்னையர் திலகமே அணையாத தீபமே
பூபதியே என்றும் உங்களை மறவோம்

சோபிதா
பாடசாலை உபகரணங்கள் விற்பனையாளர்
363, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்



தமிழ் ஈழ விடுதலை அகிம்சைப் போரில் உயிர்த்தியாகம் செய்த
முதல் பெண்மணி நீயே! உன் அடிச்சுவடுகளில் நாமும்

பகவான் மருந்தகம்
221, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்



58-வது அகவையில் பெண்ணினத்திற்கும் பெருமை தேடி
அணையாத தீபமான அன்னையே! பூபதி
உன் நினைவால் உறுதி கொள்கிறோம்

லிங்கம் கூல் பார்
வெலிங்டன் சந்தி
யாழ்ப்பாணம்

மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

# உதிக்கும் திசையிலே உருவான

# ஒரு பூகம்பம் பூபதி அம்மா!

ஈழத் தமிழர்களின் அரசியல் வரலாற்றிலே மிகப் பெரியதொரு தியாகத்தை அர்ப்பணிப்புச் செய்து வானளாவிய உயரத்திற்கு உயர்ந்து விட்டவர் அன்னை பூபதியம்மா என்று சொன்னால் அதனை மறுப்பார் யாருமில்லை.

விடுதலை விருட்சமாக, அஹிம்சைப் போராட்டத்தின் உன்னத சக்தியாக என்றும் எம்முன் கண்களில் தோன்றிக் கொண்டிருப்பவர் அன்னை அவர்கள்.

ஆறு ஆண்டுகளென்ன ஆயிரம் யுகங்கள் சென்றாலும் ஈழத் தமிழர்கள் உயிரோடு இருக்கும்வரையும் ஒவ்வொருவரின் உதடுகளும் அன்னை பூபதியை உச்சரித்துக் கொண்டுதானிருக்கும். அந்தளவு அளவிற்கு அவர் எல்லோர் மனங்களிலும் அழியா இடம்பெற்றுவிட்டார். நீங்கா மற நெஞ்சமெல்லாம் நிறைந்துவிட்டார்.

அம்மா அவர்களுடைய வாழ்வும் தமிழர்களுடைய போராட்டத்தில் பின்னிப் பிணைந்திருப்பதையும் நாம் காண்கின்றோம். அவர் மறைந்து இன்று ஆறு ஆண்டுகள் கடந்துவிட்டபோதும் அவரைப்பற்றிய சிந்தனைகள் எண்ணங்கள் யாவும் சிறுவர் முதல் பெரியோர்வரை நிறைந்திருக்கின்றன.

என். கே. துரைசிங்கம்

மட்டு. மாவட்டத்திலுள்ள நாவலக்கேணி எனும் கிராமத்தில் ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்தவர் அன்னை பூபதி அம்மா. அவருடைய கிராமத்தில் தொடர்ச்சியாக நடைபெறும் சிறிலங்காப் படைகளின் அக்கிரமங்களையும், அநியாயத்தையும் கண்டு கொதித்தெழுந்து சொல்லை வழி நின்று போராடினார்.

போராட்டம் ஆரம்பித்த காலம் தொட்டு இன்றுவரையும் எத்தனையோ இழப்புகளையும் வேதனைகளையும் சந்தித்துக் கொண்டிருக்கும் தமிழர்களில் பூபதி அம்மாவும் விதிவிலக்கானவரல்ல. ஆம் அவரது குடும்பத்தில் அவரின் இரு புதல்வர்கள் சிறிலங்கா படைகளினால் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். இவ்வாறான இழப்புகளும் வேதனைகளும் அம்மாவிற்கு வீரத்தையும் எழுச்சியையும் உணர்வையும் ஏற்படுத்தியதன் காரணமாக நாவலக்கேணி கிராமத்தைக் கூட்டி அன்னையர் முன்னணி ஊடாக இராணுவத்தை...



...ளின் அநியாயங்கள் குறித்த அன்றைய சிறிலங்கா ஜனாதிபதிக்கு அம்மா மனுக்கொடுத்தார்.

சிறிலங்கா படைகளின் நடவடிக்கைகளின் கொடுமை அம்மா அவர்கள் கிளர்ந்தெழுந்து கொண்டிருந்த நேரத்தில் தான் இலங்கை - இந்திய ஒப்பந்தம் என்ற பெயரில் கூட்டுச் சதி ஒன்று தமிழீழத்திற்கு எதிராகத் தீட்டப்பட்டது.

இந்தக் கூட்டுச்சதி வலையில் விழுந்துவிடாமல் ஈழத்தமிழர் போராட்டம் விடுதலைப்புலிகளின் தலைமையில் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருந்த போதும் இந்திய - இலங்கை ஒப்பந்தமூலம் இந்தியப் படையின் கால்கள் தமிழீழமெங்கும் பதிந்தன. அத்துடன் ஈழத்தமிழரின் போராட்டத்தினை நசுக்கும் நிலையில் சிறிலங்காவிற்கு துணையாக இருந்து இந்தியப்படைகள் செயற்படத் தொடங்கின. இதனால் இந்தியப்படைகளுடன் மோத வேண்டிய நிலை விடுதலைப் புலிகளுக்கு ஏற்பட்டது.

ஒருநாள் அல்ல இரு நாள்

[5-ம் பக்கம் பார்க்க]

## பூபதித் தாயே!

பூத்துக் குலுங்கிய
இல்லறச் சோலையில்
பூந்தென்றலாக
உறவைத் தழுவிய
பூபதித் தாயே!
பூமியைப் புரட்டும்
புயலாய் மாறினாய்!
உன்னை அறிந்தோம்!
உண்மை அறிந்தோம்!!

* * *

உலகுக்கு உணர்த்திட
உண்மையை உரைத்திட
அகிம்சை வழியில்
ஆர்த்தெழுந்தாய்
உறவை மறந்தாய்!
உணவைத் துறந்தாய்!
காந்தி தேசத்தின்
கபடத்தால் நீ
காற்றில் கலந்தாய்!
ஈழத் தமிழரின்
சன நிலையினை
உணர்ந்தது உலகம்!
உனது தியாகத்தால்
காந்தி தேசம்
தனது முகத்தில்
கரியை அப்பியது!

* * *

தென்தமிழீழத்தின்
செந்தமிழ் தாயே!
தியாகத் தாயே!
ஈகத் தீயே!
தமிழ் நிலைக்கும் வரை
தாயே! நிலைப்பாய்!
தமிழரின் நெஞ்சில்
தமிழாய் நிலைப்பாய்!

— சரவணன்

## தியாகத்தாய் பூபதியே!

மனம் வாக்குக்
காய மென்னும் திரேகம்
இனம் வாழ
இன்னுயிரை அகிம்சை என்னும்
தனம் மேவு
சத்தியப் போர் புரிந்துதந்தாய்
மனம் மேவு
தியாகத்தாய் பூபதியே.

— கவி

## அலைபாய் கடல்போல் அழியா திருக்கும்

பண்டைத் தமிழர் பரம்பரை வந்த
அன்னை நாட்டுப் படைக்கும் அஞ்சா
நெஞ்சொடு ஆங்கோர் மேடை அமைத்து
அஞ்சா திருந்து தலைமுறை வாரிபோல்
அங்கம் அழிந்து பங்கம் வரினும்
தமிழ்த் தமிழர் மானம் காக்க
உண்ணா நோன்பை உவந்தே ஏற்று
எண்ணி முப்பத் தோராம் நாளில்
விலையாய் உயிர்தரு பூபதி நாமம்
அலைபாய் கடல்போல் அழியா திருக்கும்.

— கவி இளவல்

உயிர் கொடுத்த உத்தமியே
உன் திருநிழலை இனிக்காண்போமா
பூபதியே!
ஞானம்
(பல்பொருள் விற்பனைக் கூடம்)
66, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்

மட்டு நகரில் புரட்சிப் புயலாய் வீசிய
பூபதித் தாயே!
உன் தியாகத்தால் தலைநிமிர்ந்து வாழுகிறோம்
ஸ்ரீ தாமோதர விலாஸ்
(சைவ உணவகம்)
401, கே. கே. எஸ். வீதி
யாழ்ப்பாணம்

ஈழத் தமிழ் நெஞ்சங்களின் அணையா தீபம்
அன்னை பூபதியே
எங்கள் இதய அஞ்சலி!
கண்ணன் லொட்ஜ்
(சைவ உணவகம்)
பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி

போர்க் களத்துப் பூவான
அன்னை பூபதியே
மலர மறந்தது ஏனோ!
சிவன் ஸ்ரோர்ஸ்
பரமேஸ்வரா சந்தி
திருநெல்வேலி

தியாகத்தீயில் தன்னைத்தானே ஆகுதியாக்கிய அன்னை பூபதியே!
மக்கள் மனங்களில் நிறைந்துவிட்டாய் நிலைத்து நிற்பாய்
பேபி போட்டோ
[மழலை புகைப்பட நிலையம்]
பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி.

மண்ணுக்காக தன்னையே அர்ப்பணித்த
அன்னை பூபதியே! நீ காலத்தால்
அழியாத சரித்திரம்
குறிஞ்சி மெடிக்கல்ஸ்
பரமேஸ்வரா சந்தி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்

தமிழுக்காக 32 தினங்கள் நீராகாரம் எதுவுமின்றி
தமிழ் மண்ணுக்காக மட்டுநகர் மாமாங்கப்பிள்ளையாரிடம்
சரண் அடைந்தனையோ!
அஜந்தாஸ்
54, பெரியகடை
யாழ்ப்பாணம்

தியாகத்தின் விளைநிலமே
அணையாத தீபமே பூபதித்தாயே
உன் செயலை நினைவு கூருகிறோம்
செந்தமிழ்ச் சோலை
வளாகச்சந்தி
திருநெல்வேலி

# தியாக ஒளி அன்னை பூபதியின்

# 6-ம் ஆண்டு இதய அஞ்சலி



**தியாக பூமியில்:**
**1932-11-03**

**தியாகத்தியில்:**
**1988-04-19**

**மட்டு நகரின் மாமாங்க கரையில்**
**திட்டமிட்ட சதிக்கும்பல் - நடுவில்**
**உண்ணாவிரதம் என்னும் தியாக வேள்வியில்**
**உலகை வியக்கவைத்த உத்தமியே அன்னை பூபதி**

**யாழ் மாவட்ட அனைத்து கூட்டுறவு சங்கங்களின் சார்பில்**
**யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவுச் சபை**

**14, மணிக்கூட்டு வீதி,**
**யாழ்ப்பாணம்,**

(எ-4001)

